2001 செப்டம்பர் 14] [பேரவைத் தலைவர்]

தேர்ந்தெடுக்கப்பெற வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையும், முறையாக வரப்பெற்றுள்ள நியமனத்தாள்களின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால், மேற்கண்ட மாண்புமிகு உறுப்பினர்கள் அந்தந்தப் பதவிகளுக்கு முறையாகத் தேர்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கின்றேன்.

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2001 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்ட முன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் மற்றும் ஆய்வு செய்யவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

4. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(உ) தொகுதி மேம்பாட்டு நிதி மூலம் செய்யவுள்ள வேலைகளுக்கான பட்டியலைக் கொடுக்கும் கால அளவை நீட்டித்தல்

திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக உள்ளாட்சித் துறை அமைச்சருடைய கவனத்திற்கு நான் இந்தக் கருத்தைக் கொண்டு வருகிறேன். இது என்னுடைய கருத்து அல்ல. சட்ட மன்ற உறுப்பினர்கள் அத்தனை பேருடைய சார்பாகவும் இந்தக் கோரிக்கையை நான் வைக்கிறேன். நம்முடைய ஊரக வளர்ச்சித் துறையின் சார்பாகச் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் சம்பந்தமாக அரசு ஆணை ஒன்று 5-9-2001-லே வெளியிடப்பட்டிருக்கிறது. அந்த அரசு ஆணை நேற்றையதினம் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் நெப்போலியன் அவர்கள் வீட்டிற்கு ஒரு தபால் மூலமாக வந்திருக்கிறது. வேறு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அநேகமாக அது வரவில்லை. எல்லோரும் இங்கே இருக்கிறோம். ஆனால், அதிலே என்ன சொல்லி இருக்கிறது என்று சொன்னால், நாளையதினம், அதாவது 15-9-2001-க்குள் அவசியம் சட்டமன்ற உறுப்பினருடைய நிதியிலே எந்தெந்த வேலைகளை எடுக்கப் போகிறோம் என்ற பட்டியலை—அவசரமாக 15-9-2001-க்குள்—கொடுக்க வேண்டுமென்று சொல்லி வலியுறுத்தி..... (குறுக்கீடு)*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

முற்பகல் 11-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. மாண்புமிகு உறுப்பினர் ஏதோ விளக்கம் கேட்கிறார்.

திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: வலியுறுத்திக் கடிதம் வந்திருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களும் சென்னையிலே இருக்கிற காரணத்தால், இதில் கால நீட்டிப்புத் தேவை; அதாவது last date-ஐ நீட்டித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, ஒரு வார காலம் அவகாசம் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை உறுப்பினர்கள் அத்தனைபேரும் இங்கேயே இருந்து கொண்டிருக்கிறோம். ஒரு வார காலம் என்பது போதாது. செப்டம்பர் 30 வரையில் இந்தத் தேதியை நீட்டித்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2001-2002, மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2001-2002 ஆம் ஆண்டு கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையிலே. முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது: